**THE LABOUR COURT, SALEM**
**C.P.No. 142 Of 2018**

**<u>05.11.2024</u>**

**RW2 – திரு. பழனிசாமி**
குறுக்கு விசாரணை – (மனுதாரர் தரப்பில்)

நான் என்னுடைய சாட்சி பிரமாண வாக்குமூலத்தில் நான் எதிர்மனுதாரர் சங்கத்தில் என்னவாக வேலை செய்கிறேன் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் மனுதார்ர் தாக்கல் செய்த கோரிக்கை மனு, எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை மற்றும் இருதரப்பு ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிர்மனுதாரர் யார் என்று தெரியாமல் என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் செயலாளரை எதிர்மனுதாரராக காட்டியுள்ளோம் என்றால் சரிதான். என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் 2ம் எதிர்மனுதாரரின் 2ம் சாட்சி என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2ம் பத்தியில் முதல் எதிர்மனுதாரர் ஆகிய நடராஜன், தந்தை பெயர் தேவராஜன் என்பவர் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையை படித்து பார்த்து தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரருக்கு ரூ.1,15,652.78/– தொகை கொடுக்கவேண்டும் என சொல்லியுள்ள நிலையில் ஏன் அதை மனுதாரருக்கு இதுவரை கொடுக்கப்படவில்லை என்றால், அதை செயலாளரிடம் அல்லது செயலாட்சியரிடம்தான் கேட்கவேண்டும். மனுதாரர் மனுவில் எத்தனை தலைப்புகளில் எவ்வளவு தொகை கோரியுள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அலுவலகத்திலிருந்து தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என்ன என்றும் அதன் விபரங்களும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். Ex.R40 கடிதம் நீதிமன்றத்திற்கு எங்கள் செயலாளர் கொடுத்த கடிதம் அல்ல என்றால் சரிதான். இந்த கடிதம் எனக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றும், கடிதத்தில் நான் வழக்கில் 2ம் எதிர்மனுதாரராக ஆஜராக அனுமதிக்கப்படுகிறது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் சாட்சியம்

அளிக்க எனக்கு இக்கடிதத்தில் அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மனுதாரர் கோரிக்கை சம்பந்தமாக முடிவு எடுக்கவோ, அனுமதிக்கவோ, பரிந்துரை செய்யவோ எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். முறைகேட்டின் தொகை என நான் சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மும்முடி நியாய விலைக்கடையில் முறைகேடு நடந்துள்ளதாக முதன்முதலில் புகார் கொடுத்தது மனுதாரர்தான் என்றால் சரிதான். மனுதாரர் பணியிலிருந்து விலகியபிறகு மனுதாரருக்கு கொடுக்கவேண்டிய தொகைகளை கொடுக்க முடியாது என உத்தரவு எதுவும் சங்கம் பிறப்பிக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர் தனக்கு கிடைக்கவேண்டிய பணப்பலன்களை கோரி தாக்கல் செய்த மனுவிற்கு என் தரப்பில் ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem.